பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
10 07 2025 **THURSDAY** 6 45 **AM**
வணக்கம்-மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- நமீபியா நாட்டின் வளர்ச்சிக்கு இந்தியா உறுதுணையாக இருக்கும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.
- மக்களின் மனநிறைவை உறுதி செய்யும் வகையில், குறைதீர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று மத்திய இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் அதிகாரிகளை வலியுறுத்தியுள்ளார்.
- தமிழகத்தில் கடந்த நான்காண்டுகளில் 18 லட்சத்து 30 ஆயிரம் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளதாக துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.
- மாநிலத்தில் பள்ளி கல்லூரி மாணவர்களுக்கான அரசு விடுதிகளின் தரம் மேம்படுத்தப்பட வேண்டும் என்று பாமக வலியுறுத்தியுள்ளது.
- சென்னையில் இன்று தொடங்கும் எம்.சி.சி. - முருகப்பா தங்கக் கோப்பைக்கான ஹாக்கிப் போட்டியில் தமிழக அணி – மகாராஷ்ட்ர அணியை எதிர்கொள்கிறது.

>>>>>><<<<<<

நமீபியா நாட்டின் வளர்ச்சிக்கு இந்தியா உறுதுணையாக இருக்கும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

அந்நாட்டு நாடாளுமன்றத்தில் உரையாற்றிய அவர், நமீபியாவில் சுகாதார கட்டமைப்பு விரிவாக்கம், இளைஞர்களின் திறன் மேம்பாடு ஆகியவற்றில் இந்தியா கவனம் செலுத்தும் என்று தெரிவித்தார்.

ஆப்பிரிக்காவில் புதுமை கண்டுபிடிப்புகளை ஊக்குவித்தல், உள்ளூர் வேலைவாய்ப்புகளை உருவாக்குதல், திறன் மேம்பாடு கட்டமைப்பு ஆகியவற்றில் இந்தியா தொடர்ந்து முதலீடு செய்யும் என்று அவர் உறுதியளித்தார்.

தொழில்மயமாக்கல் இலக்குகள் உள்ளிட்ட ஆப்பிரிக்க யூனியனின் திட்டங்களுக்கு இந்தியா ஆதரவு அளிக்கும் என்று பிரதமர் தெரிவித்தார்.

ராணுவம், பாதுகாப்பு உள்ளிட்ட முக்கிய துறைகளில் இந்தியா ஒருங்கிணைந்து செயல்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அதிகாரம் மூலமாக அல்லாமல், கூட்டாண்மை மூலம் எதிர்காலத்தை கட்டமைக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

வளரும் நாடுகளின் நிலை குறித்து இந்தியா அக்கறை கொண்டுள்ளதாகவும், உலக நாடுகளுடன் ஒருங்கிணைந்து வளர முடியும் என்று நம்பிக்கை கொண்டுள்ளதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

இந்தியா – ஆப்பிரிக்கா இடையேயான கூட்டாண்மை பகிரப்பட்ட வளர்ச்சி மற்றும் நோக்கத்தின் அடிப்படையில் அமைந்துள்ளது என்று அவர் கூறினார்.

இந்தியா – நமீபியா இடையே தொழில் முனைவு, சுகாதாரம் மற்றும் டிஜிட்டல் ஒத்துழைப்பு ஆகியவற்றில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள், இருதரப்பு உறவை வலுப்படுத்தும் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

நமீபியாவின் முதல் பெண் அதிபராக திருமதி. **Netumbo Nandi – Ndaitwah-**வை தேர்ந்தெடுத்ததற்காக, பாராட்டு தெரிவித்த அவர், இது வரலாற்றுச் சிறப்புமிக்க தருணம் என்றும், ஆப்பிரிக்காவின் ஜனநாயக வலிமையை பிரதிபலிப்பதாகவும் கூறினார்.

பின்னர், தமது ஐந்து நாடுகள் பயணத்தை முடித்துக் கொண்டு திரு. நரேந்திர மோடி தாயகம் புறப்பட்டார்.

**>>>>>><<<<<<**

பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு நமீபியா நாட்டின் உயரிய விருது வழங்கப்பட்டுள்ளது, ஒவ்வொரு இந்தியருக்கும் பெருமைக்குரிய தருணம் என்று தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து சமூகவலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், இதன் மூலம் உலக அரங்கில் நமது நாட்டின் பெருமை பன்மடங்கு உயர்ந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

**>>>>>><<<<<<**

மக்களின் மனநிறைவை உறுதி செய்யும் வகையில், குறைதீர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் அதிகாரிகளை வலியுறுத்தியுள்ளார்.

பொதுமக்களின் குறைகளை உரிய வகையில் நிவர்த்தி செய்வது தொடர்பாக புதுதில்லியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தேசிய பயிலரங்கில் அவர் உரையாற்றினார்.

கொள்கைகளை வகுப்பதிலும், குறைபாடுகளை களைவதிலும் இதனை வாய்ப்பாக கருத வேண்டும் என்று அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

குறைதீர்ப்பு நடவடிக்கைகள் வாழ்க்கை முறைகளை எளிதாக்கும் கருவியாக இருக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

ஆண்டுதோறும் 26 லட்சத்திற்கும் மேற்பட்ட குறைகள் தொடர்பான மனுக்கள் தாக்கல் செய்யப்படுவதாக அவர் தெரிவித்தார்.

இது, நம்பிக்கை மற்றும் குறைதீர்ப்பு நடவடிக்கைகளில் ஏற்பட்டுள்ள மாற்றத்தை பிரதிபலிப்பதாக திரு. ஜிதேந்திர சிங் குறிப்பிட்டார்.

>>>>>><<<<<<

தமிழகத்தில் கடந்த நான்காண்டுகளில் 18 லட்சத்து 30 ஆயிரம் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளதாக துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

கரூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், பட்டா வழங்குவதற்கான நடைமுறைகளை அரசு எளிமைப்படுத்தியுள்ளதாக கூறினார்.

தமிழகம், 9 புள்ளி ஆறு ஒன்பது சதவீதத்துடன் நாட்டிலேயே பொருளாதார வளர்ச்சியில் முன்னிலையில் உள்ளதாக அவர் தெரிவித்தார்.

முன்னதாக, கரூர் புதிய பேருந்து நிலையம் உள்ளிட்ட 58 கோடி ரூபாய் மதிப்பிலான 13 முடிவுற்ற திட்டப் பணிகளை அவர் தொடங்கி வைத்தார்.

மூன்று புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 18 ஆயிரத்திற்கும் அதிகமான பயனாளிகளுக்கு 162 கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும் திரு. உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்.

>>>>>><<<<<<

மாநிலத்தில் பள்ளி கல்லூரி மாணவர்களுக்கான அரசு விடுதிகளின் தரம் மேம்படுத்தப்பட வேண்டும் என்று பாமக நிறுவனர் மருத்துவர் ச. ராமதாசு, தமிழக அரசை வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், விடுதிகளின் பெயர் மாற்றம் மட்டும் போதாது என்றும், மாணவர்கள் விடுதியில் கல்வி கற்பதற்குரிய வசதிகளை ஏற்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளார்.

பள்ளி, கல்லூரி மாணவர்களிடையே போதைப் பொருள் பழக்கத்தை முற்றிலுமாக ஒழிப்பதற்கு அரசு தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மருத்துவர் ச. ராமதாசு வலியுறுத்தியுள்ளார்.

>>>>>><<<<<<

தமிழகத்திலிருந்து இந்த ஆண்டு புனித ஹஜ் பயணம் மேற்கொண்ட யாத்ரிகர்களின் கடைசி விமானம் நேற்று சென்னை வந்தடைந்தது.

அந்த விமானத்தில் வந்திறங்கிய 383 யாத்ரிகர்களை, மாநில சிறுபான்மை நலத்துறை அமைச்சர் திரு. நாசர் விமான நிலையத்தில் வரவேற்றார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஹஜ் யாத்ரிகர்களுக்காக சிறப்பான ஏற்பாடுகள் செய்யப்பட்டதாகவும், தென்மாவட்ட மக்கள் விரும்பும் பட்சத்தில் அடுத்த ஆண்டு முதல் அப்பகுதியிலிருந்து, ஹஜ் பயணத்திற்கான ஏற்பாடு செய்யப்படும் என்றும் கூறினார்.

நங்கநல்லூரில் புதிதாக கட்டப்படவுள்ள ஹஜ் இல்லத்தின் பணிகள் விரைவில் தொடங்கப்படும் என்றும் திரு. நாசர் குறிப்பிட்டார்.

>>>>>><<<<<<

குற்றாலம் சாரல் திருவிழா இம்மாதம் 19ஆம் தேதி தொடங்குகிறது.

ஒன்பது நாட்கள் நடைபெறவுள்ள இவ்விழாவில், மலர் கண்காட்சி மற்றும் பல்வேறு போட்டிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - செந்தில் 45 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

இருவரிச் செய்திகள்

தெற்காசியாவில் அடுத்த ஐந்தாண்டுகளுக்குள் ஒரு கோடியே 80 லட்சத்திற்கும் மேற்பட்ட பெண்கள் மற்றும் சிறுமிகள் ரத்தசோகையால் பாதிக்கப்பட வாய்ப்புள்ளதாக உலக சுகாதார அமைப்பு, யுனிசெஃப் மற்றும் சார்க் அமைப்புகள் எச்சரித்துள்ளன.

>>>>>><<<<<<

யுக்ரைன் மீது நேற்று ட்ரோன்கள் மற்றும் ஏவுகணைகள் மூலம் ரஷ்யா தாக்குதல் நடத்தியதாக யுக்ரைன் அதிபர் திரு. விளாடிமிர் ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

தெலங்கானாவில் கரீப் பருவத்தில் விவசாயிகளுக்கு தேவையான உரங்கள் தடையின்றி கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும் என்று மத்திய ரசாயனத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

>>>>>><<<<<<

பிரதமரின் கிராமப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், நான்காவது கட்டமாக 46 ஆயிரம் கிலோமீட்டர் தொலைவிற்கு புதிய சாலைகள் அமைக்கப்படவுள்ளதாக மத்திய இணையமைச்சர் திரு. கம்லேஷ் பஸ்வான் தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

தேசிய மீன் விவசாயிகள் தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

>>>>>><<<<<<

கள்ளக்குறிச்சி மாவட்டம், கூவனூர், சாங்கியம் கிராமங்களுக்கு இடையே தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே புதிதாக கட்டப்பட்டு வரும் உயர்மட்ட பாலப்பணிகளை பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எ.வ.வேலு ஆய்வு செய்தார்..

>>>>>><<<<<<

கோவை குற்றாலம் அருவியில் நீர்வரத்து குறைந்ததால், சுற்றுலாப் பயணிகள் நாளை முதல் அருவியில் குளிக்க வனத்துறை அனுமதி அளித்துள்ளது.

>>>>>><<<<<<

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரியில் கடத்தப்படவிருந்த ஒரு டன் எடையிலான ரேசன் அரிசியை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

>>>>>><<<<<<

திருப்பூர் மாவட்டம், எல்லப்பாளையம் ஊராட்சியில் குடிநீர் இணைப்பு வழங்க லஞ்சம் பெற்ற ஊராட்சி மன்ற செயலாளரை லஞ்ச ஒழிப்பு காவல்துறையினர் கைது செய்தனர்.

>>>>>><<<<<<

கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை அருகே காட்டு யானை தாக்கியதில் விவசாயி ஒருவர் உயிரிழந்தார்.

>>>>>><<<<<<

விளையாட்டுச் செய்திகள்

எம்.சி.சி. - முருகப்பா தங்கக் கோப்பைக்கான ஹாக்கிப் போட்டி இன்று சென்னையில் தொடங்குகிறது.

எழும்பூரில் உள்ள மேயர் ராதாகிருஷ்ணன் மைதானத்தில் நடைபெறும் இப்போட்டியில் தமிழக அணி இன்று மகாராஷ்ட்ர அணியை எதிர்கொள்கிறது.

இப்போட்டி மாலை மணி 4.15-க்கு தொடங்குகிறது.

அதைத் தொடர்ந்து கர்நாடகா - மத்திய நேரடி வரிகள் வாரிய அணியை எதிர்கொள்கிறது.

>>>>>><<<<<<

இங்கிலாந்து அணிக்கு எதிரான 4வது மகளிர் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

எமிரேட்ஸ் ஓல்டு ட்ராஃபோர்டில் நேற்றிரவு நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த இங்கிலாந்து, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 7 விக்கெட் இழப்புக்கு 126 ரன் எடுத்தது.

127 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய இந்தியா, 17 ஓவரில் 4 விக்கெட்களை இழந்து, இலக்கை எட்டியது.

இதன்மூலம் 5 போட்டிகளைக் கொண்ட இத்தொடரை இந்தியா 3-1 என்ற ஆட்டக்கணக்கில் வென்றது.

>>>>>><<<<<<

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான 3வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி இன்று தொடங்குகிறது.

லண்டனில் நடைபெறவுள்ள இப்போட்டி பிற்பகல் மணி 3.30-க்கு தொடங்குகிறது.

>>>><<<<<<